நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை குற்றத் தடுப்புத் தொடர்கள்

# உங்கள் காரைப் பாதுகாத்துக் கொள்ளவும்

வாகனப் பாதுகாப்பு

காரின் வசதியைச் சார்ந்திருப்பதைத்தான் நம்மில் பெரும்பாலானோர் ஏற்றுக் கொள்கின்றனர். இருப்பினும், உங்கள் காரோ, அதிலுள்ள உடைமைகளோ திருடப்பட்டாலோ அல்லது சேதமடைந்தாலோ, அதன் விளைவுகள் உங்கள் குடும்பம், வேலை மற்றும் நிதிநிலைமைக்குப் பேரழிவு தரக்கூடியதாக இருக்கும்.

ஒரு காரிலிருந்து திருடுவது என்பது பொதுவாகச் சந்தர்ப்ப சூழ்நிலையால் நேரக்கூடிய குற்றமாகும். ஆகவே வெளியில் தெரியும்படியாக விலைமதிப்புள்ள உங்கள் உடைமைகளை விட்டுச் செல்வதோ அல்லது மோசமான வாகனப் பாதுகாப்போ தேவையற்ற கவனத்தை ஈர்க்கக்கூடியதாகும். உங்கள் கார் பூட்டப்பட்டிருப்பதை உறுதிப்படுத்த, புதிதாய் வந்துள்ள அருகாமைச் சாவிகளுடன், கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சமீப காலத்திய வாகனங்கள் திருட்டு போவதற்கு (ஏறத்தாழ 70 விழுக்காடு) காரணம், அவற்றைத் திருட்டுத்தனமாக இயக்கி எடுத்துச் செல்வதனால் அல்ல, மாறாக வீட்டை உடைத்து உட்புகுந்து உரிமையாளரின் சாவியைத் திருடி எடுத்துச் செல்வதனால்தான். *(National Motor Vehicle Theft Reduction Council)*

வீட்டிலோ அல்லது வெளியில் சுற்றும்போதோ உங்கள் காருக்காக ஒரு சில கூடுதல் முன்னெச்சரிக்கைகளை எடுப்பதன் மூலம், நீங்கள் இந்தவகைக் குற்றத்தினால் பாதிக்கப்படும் வாய்ப்புகளைக் கணிசமாகக் குறைக்கமுடியும்.

நமது வாகனங்களைச் சிறப்பாகப் பாதுகாத்துக் கொள்ள நாம் அனைவரும் பின்பற்ற வேண்டிய சில எளிய வழிமுறைகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

## திருட்டுப் போவதிலிருந்து உங்கள் காரை பாதுகாத்துக் கொள்ளவும்

- உங்கள் காரில் நீங்கள் இல்லாதபோது, அது வீட்டின் முன்புற வாகனப் பாதையில் இருந்தாலும் கூட, இக்னீஷனில் உங்கள் சாவியை **ஒருபோதும்** விட்டுவைக்க வேண்டாம்.
- வாகனத்தை ஓட்டும்போது மட்டுமல்லாமல் **எப்போதும்** உங்கள் காரின் கதவுகளையும், சன்னல்களையும் பூட்டி வைக்கவும்.
- உங்கள் காரின் பாதுகாப்பை மேம்படுத்தத் தரமான எச்சரிக்கை ஒலிப்பானையோ அல்லது பழைய வாகனங்களென்றால் மின்னணு இயக்க நிறுத்தி சாதனத்தையோ (electronic immobiliser) பொருத்த வேண்டுமென **முடிவெடுங்கள்**.
- வீட்டிலோ அல்லது உணவகங்கள் போன்ற பொது இடங்களிலோ வெளியில் தெரியும்படியாக உங்கள் சாவியை **ஒருபோதும்** விட்டுவைக்க வேண்டாம். *carsafe – car-security-begins-at-home*

## உங்கள் காரிலுள்ள பொருட்களைப் பாதுகாத்துக் கொள்ளவும்

- உங்கள் காரை விட்டு வெளியே செல்லும்போது **எப்போதும்** உங்கள் காரின் கதவுகளையும், சன்னல்களையும் பூட்டி வைக்கவும்.
- வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும், கைத் தொலைபேசிகள், கைப்பைகள், ஜி.பி.எஸ் அல்லது சில்லரைக் காசுகள் போன்ற மதிப்புமிக்க பொருட்களை **ஒருபோதும்** வெளியில் தெரியும்படி விட்டுவைத்திருக்க வேண்டாம்.
- **எப்போதும்** நல்ல வெளிச்சமுள்ள அல்லது மக்கள் நெருக்கமுள்ள இடத்தில் நிறுத்த முயற்சி செய்யுங்கள்.
- **கைவினைஞர்கள்** தங்கள் உபகரணப் பெட்டிகளையும், தொழில் வாகனத் (ute) தட்டுப்பெட்டிகளையும் எப்போதும் பூட்டி வைத்து, இரவில் தெருவோரங்களில் நிறுத்தி வைப்பதைத் தவிர்க்க முயற்சிக்கவும்.

## உங்கள் காரை விற்பனை செய்யும்போது உங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும்

- உங்கள் காரை விற்பனை செய்யும்போது **ஒருபோதும்** உங்கள் வீட்டு முகவரியை விளம்பரம் செய்யவேண்டாம்.
- **எப்போதும்** வாங்க வருவோரின் அங்க அடையாளத்தைக் கவனித்துப் பார்த்துப் பதிவு செய்து கொள்ளவும்.
- மேற்பார்வை இல்லாமல் **ஒருபோதும்** உங்கள் காரை சோதனை ஓட்டத்துக்கு எடுத்துச் செல்ல யாரையும் அனுமதிக்க வேண்டாம். *carsafe – Theft_with_ForceBrochure.pdf*

***இந்தத் தலைப்பைப் பற்றிய மேலதிக விவரங்களுக்குத் தயவுசெய்து carsafe.com.au என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.***

***மேலதிகக் குற்றத் தடுப்புத் தகவல்களுக்குத் தயவுசெய்து www.police.nsw.gov.au என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.***

NSW Police Force

**Triple Zero (000)**
நெருக்கடியான அல்லது உயிருக்கு ஆபத்தான நிலைமையில்.

**Police Assistance Line (131 444)**
நெருக்கடியில்லாத நேரங்களில்.

**Crime Stoppers (1800 333 000)**
குற்றம் பற்றிய தகவல்களை வழங்க. இதில் பெயர் வெளியிடப்படமாட்டாது.